**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு.**

**முன்னிலை : திரு.G.அஜய் விக்ரிஷ் குமார்,B.B.A.,LLB., (Hons)**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு.**

**2026 –ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17–ஆம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்(CC).142/2020**

**(CNR No.TNDP05-000395-2020)**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

மாரண்டஅள்ளி காவல் நிலையம்,

குற்ற எண்.891/2020. ... குற்றமுறையிடுபவர்

**/இடையே/**

1. மகேஸ்வரி (வயது 46/2020)

   த/பெ. கண்ணு (எ) முனுசாமி.

   கோட்டுர், சீரியம்பட்டி அஞ்சல்,

   பாலக்கோடு தாலுக்கா.

2. பகலவன் (வயது 26/2020)

   த/பெ.முனிராஜ்.

3. முனிராஜ் (வயது 45/2020)

   த/பெ.கரியன் (எ) திம்மராயன்.

4. கோவிந்தராஜ் (வயது 40/2020)

   த/பெ. முனியப்பன்

   **<u>2 முதல் 4 எதிரிகளின் முகவரி</u>**

   சீரியனஅள்ளி கிராமம்,

   சீரியனஅள்ளி அஞ்சல்,

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:10:21 +0530

பாலக்கோடு தாலுக்கா,

தருமபுரி மாவட்டம். .... எதிரிகள்

இவ்வழக்கு 17.09.2020 – அன்று இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 142/2020ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, கடந்த 02.06.2026 –ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சிவா,B.A.,B.L.,DCS., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

| | | | |
|---|---|---|---|
| | S.No of the case | C.C No.142/2020 | |
| a. | The Date of commission of the offence | 25.05.2020 | |
| b. | Date of filing of FIR | 26.05.2020 | |
| c. | Details on date of arrest of Accused and date of bail | Arrest of Accused | Accused were released on Bail |
| | | --- | --- |
| d. | The date of filing of the final report in the Court | 17.09.2020 | |
| e. | The date of questioning of the accused U/s 251 of Cr.P.C. | 25.01.2021 | |
| f. | Filing of all miscellaneous petitions and their results including | NIL | |


AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:10:28 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | the results on challenge before Superior Courts; except routine petitions like petitions under section 317 of the Code. | | | |
| g. | Date of examination in – chief and cross examination of a witness. | **Prosecution side witnesses** | **Chief examination** | **Cross examination** |
| | | PW1 | 07.02.2022 | 07.02.2022, 05.03.2026 |
| | | PW2 | 07.02.2022 | 07.02.2022 |
| | | PW3 | 04.04.2022 | 04.04.2022, 08.05.2026 |
| | | PW4 | 04.04.2022 | 04.04.2022 |
| | | PW5 | 04.04.2022 | 04.04.2022 |
| | | PW6 | 30.01.2025 | 30.01.2025 |
| | | PW7 | 13.02.2025 | 30.01.2025 |
| | | PW8 | 13.02.2025 | 13.02.2025, 26.05.2026 |
| | | RW1 | 13.03.2025 | 13.03.2025 |
| | | RW2 | 27.03.2025 | 27.03.2025 |
| h. | Date of examination in – chief and cross examination of a witness. | **Nil** | | |
| i. | Date of examination of the accused and Under Section 313 of the Code. | 02.06.2026 | | |
| j. | Details of abscondence of an | **Date of issue of** | **Date of withdrawal of** | |



AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:10:34 +0530

| | | | |
|---|---|---|---|
| | accused and his appearance / production, as the case may be; | **warrant**<br>**--** | **warrant**<br>**--** |
| k. | Date adjourned for judgment of the case | 11.06.2026 | |
| l. | The Date of the Order | 17.06.2026 | |

இவ்வழக்கானது மாரண்டஅள்ளி, காவல் உதவி ஆய்வாளரால் 1 முதல் 4 எதிரிகள் மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 294(b), 341, 323, 324, 506(2) –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு–**

புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் வழிதடம் பிரச்சனை மற்றும் காலிஜாகா சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தநிலையில், கடந்த 25.05.2020–ம் தேதி காலை 11.00 மணிக்கு சாட்சி 1 கிருஷ்ணன் மழைக்காற்றால் கீழே விழுந்த பந்தலை சரி செய்து கொண்டிருந்தபோது 1–வது எதிரி மகேஸ்வரி, சாட்சி 1–ஐ பார்த்து ஜாடையாக தேவிடியா பையா, கண்டார ஓலி மகனே என கெட்ட வார்த்தையால் திட்டியும், சாட்சி 1 எதிரியை பார்த்து ஏண் என்னை திட்டற என்று கேட்டதற்கு மகேஸ்வரிக்கு சப்போட்டா வந்த சீரியம்பட்டியைச் சேர்ந்த 2–வது எதிரி பகலவன், 3–வது எதிரி முனிராஜ், 4–வது எதிரி கோவிந்தராஜ் ஆகியோர்களை சாட்சி 1 நகர விடாமல் பிடித்துக்கொண்டும், 1–வது எதிரி கட்டையால் சாட்சி 1 கிருஷ்ணனின் முன்தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 4–வது எதிரி கோவிந்தராஜ் முதுகில் கையால் அடித்து காலால் வயிறு மீது உதைத்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1 முதல் 4 எதிரிகள் சாட்சி 1ஐ அடித்துவிட்டு போகும் போது என்னைக்கிருந்தாலும் கொன்று புதைத்து


AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:10:39 +0530

விடுவோம் என கொலைமிரட்டல் விடுத்ததாக 1 முதல் 4 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 341, 323, 324, 506(2) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக மாரண்டஅள்ளி, காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. 1 முதல் 4 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், 1 முதல் 4 எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு – 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து, 1–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 294(b), 324, 506(2) –ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 2, 3 எதிரிகள் மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 341, 506(2) –ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 4–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 341, 323, 506(2) –ன் கீழ் குற்றச்சாட்டுகளும், வனைந்து, குற்றம் பற்றி எடுத்துரைத்து வினவியபோது, 1 முதல் 4 எதிரிகள் குற்றத்தை மறுத்து விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் இல்லை. எதிரிகள் தரப்பில் எ.சா.1 மற்றும் எ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, எதிரிகள் தரப்பில் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் இல்லை.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:10:46 +0530

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு–</u>

i) கடந்த 25.05.2020–ம் தேதி காலை 11.00 மணிக்கு கிருஷ்ணன்(அ.சா.1) மழைக்காற்றால் கீழே விழுந்த பந்தலை சரி செய்து கொண்டிருந்தபோது எதிரி மகேஸ்வரி, அ.சா.1–ஐ பார்த்து ஜாடையாக தேவிடியா பையா, கண்டார ஓலி மகனே என கெட்ட வார்த்தையால் திட்டிதை, அ.சா.1, எதிரியை பார்த்து ஏன் என்னை திட்டற என்று கேட்டதற்கு எதிரிகள், அ.சா.1–ஐ நகர விடாமல் வழிமறைத்தும், கட்டையாலும், கையாலும், தாக்கி காயப்படுத்தியும், கென்றுவிடுவோம் என கொலைமிரட்டல் விடுத்துள்ளார்கள். மேற்படி தகராறில் அ.சா.1 –க்கு ஏற்பட்ட காயத்திற்காக வேண்டி தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்ற போது கொரோன தொற்று பரவல் காரணமாக உள்நோயாளிகாக அனுமதி பெறாமல், வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

ii) பின்னர் சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க கோரி நிலையம் ஆஜராகி மாரண்டஅள்ளி, காவல் உதவி ஆய்வாளர் திரு.தணிகாசலம் (அ.சா.8) வசம் புகார் மனு (அ.சா.ஆ.1) அளிக்கப்பட்டது. மேற்படி புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண்.891/2020 இ.த.ச. பிரிவுகள் 294(b), 341, 323, 324, 506(2) –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.5) பதிவு செய்துள்ளார்.

iii) பின்னர் இவ்வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோவிந்தராஜ் (அ.சா.5), முருகேசன் (அ.சா.6) ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர்(அ.சா.ஆ.2), மாதிரிவரைபடம்(அ.சா.ஆ.6),தயாரித்துள்ளார். மேற்படி தகராறு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் முனியப்பன் (அ.சா.2), வடிவேல் (not examined), வாசுகி (அ.சா.3) ஆகியோர்களையும், வஞ்சிகோவன்(அ.சா.4) மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:10:52 +0530

iv) தருமபுரி அரசு மருத்துவமனையில் சிசிக்சை பெற்று வந்த கிருஷ்ணனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சுகந்தி (அ.சா.7)–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், கிருஷ்ணனுக்கு அளிக்கப்பட்ட OP ரசீது (அ.சா.ஆ.3) மற்றும் கிருஷ்ணனின் காயச்சான்று (அ.சா.ஆ.4) –ஐ பெற்றும். காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

v) அதை தொடர்ந்து இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் கூடுதல் சாட்சியாக மகேஸ்வரி (எ.சா.1) மற்றும் வளர்மதி (எ.சா.2) ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி தகராறு சம்பவத்தில் 1–வது எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற வேண்டி தருமபுரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதை தொடர்ந்து மாரண்டஅள்ளி காவலர் சிகிச்சையில் இருந்த எ.சா.1–ஐ விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்து நிலைய குற்ற எண்.892/2020 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) மற்றும் 4 of TNPWH Act–கீழ் முதல் தகவல் அறிக்கை எ.சா.ஆ.2 பதிவு செய்துள்ளார்கள். மேலும் 1–வது எதிரி மருத்துவ சிகிச்சையின் போது பெறப்பட்ட மருத்துவ டிஸ்ஜார்ஜ் சம்மரி எ.சா.ஆ.2 ஆகவும், 2–வது எதிரி மருத்துவ சிகிச்சையின் போது பெறப்பட்ட மருத்துவ டிஸ்ஜார்ஜ் சம்மரி எ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுள்ளது.

6. இவ்வழக்கில் 1 முதல் 4 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து 1 முதல் 4 எதிரிகளிடம் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய பொழுது, 1 முதல் 4 எதிரிகள் அவற்றை பொய் சாட்சிகள் எனவும், பொய் வழக்கு என்றும் கூறினார்கள். தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில்


AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.06.17 18:10:59 +0530

சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7) அரசு தரப்பு வாதுரையில் இவ்வழக்கின் 1 முதல் 4எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகள் உண்மை எனவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே 1 முதல் 4எதிரிகளை தண்டிக்க வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

8) 1 முதல் 4 எதிரிகள் தரப்பு வாதுரையில், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை எனவும், எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் உள்ள முன்விரோதத்தை நிறைவேற்றவே எதிரிகளின் மீது பொய் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பட்டது.

10. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் 1-வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 294(b), 324, 506(2) -ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 2, 3எதிரிகள் மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 341, 506(2) -ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 4-வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 341, 323, 506(2) -ன் கீழ் குற்றச்சாட்டுகளும், அரசு தரப்பினால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு</u>**

i) கிருஷ்ணன்(அ.சா.1) தனது சாட்சியத்தில் நிலம் சம்பந்தமாக எதிரி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:11:07 +0530

மகேஸ்வரியுடன் முன்விரோதம் உள்ளது எனவும், 25.05.2020 ஆம் தேதி காலை சுமார் 11:00 மணியளவில் 1–வது எதிரி தனது வீட்டின் முன்பு உள்ள காலி இடத்தில நின்று கொண்டு தன்னை தேவிடியா மகனே என அசிங்கமாக திட்டினார் எனவும், கேள்வி கேட்க எதிரிகள் பகலவன், முனிராஜ், கோவிந்தராஜ் ஆகியோர் தன்னை பிடித்துக்கொள்ள, 1–வது எதிரி மகேஸ்வரி கட்டையால் மண்டையில் அடித்து இரத்த காயம் ஏற்பட்டது எனவும், எதிரி கோவிந்தராஜ் முதுகில் அடித்து வயிற்றில் எட்டி உதித்தார் எனவும், எதிரிகள் தன்னை கொன்று புதைத்து விடுவோம் என மிரட்டியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) முனியப்பன் (அ.சா.2) தனது சாட்சியத்தில் சம்பவத்தின் போது தான் தனது வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்ததாகவும், சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது அ.சா.1 மற்றும் எதிரிகள் உடன் வெளியூர் ஆட்களுடன் பிரச்னை போட்டுக்கொண்டு இருந்தார்கள் எனவும்,அ.சா.1 தலையில் இரத்தம் வந்தது எனவும் சாட்சியம் அளித்துளளார்.

iii) வாசுகி (அ.சா.3) தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று எதிரி மகேஸ்வரி மற்றும் அ.சா.1 –க்கும் இடையே வாய் தகராறு நடந்ததை தான் தனது வீட்டின் மடியில் இருந்து பார்த்ததாகவும், அ.சா.1 –னிற்கு அடிபட்டதாக கேள்விப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

iv) வஞ்சிகோவன்(அ.சா.4) தனது சாட்சியத்தில் சம்பத்தின் போது தான் வயலில் இருந்ததகவும், கூச்சல் சத்தம் கேட்டு சம்பவ இடம் வந்து வழக்கு சம்பவம் குறித்து தெரிந்து கொண்டதாகவும், அ.சா.1– னிற்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகள் கோவிந்தராஜ் (அ.சா.5) மற்றும் முருகேசன்(அ.சா.6) தங்களது சாட்சியத்தில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயாரித்த பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ததாக


AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.06.17 18:11:35 +0530

சாட்சியம் அளித்துள்ளார்கள்.

v) கிருஷ்ணன்(அ.சா.1) –னிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுகந்தி (அ.சா.7) தனது சாட்சியத்தில் அ.சா.1 சிகிச்சையின் போது தன்னை தெரிந்த 10 நபர்கள் கட்டை, கல் மற்றும் கையால் தாக்கியதாக குறிப்பிட்டதாகவும், அவரை பரிசோதித்ததில் அவருக்கு முன்தலையில் கிழிந்த காயமும், முதுகில் வலி இருப்பதாகவும் கூறினார் எனவும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

vi) மருத்துவர் சுகந்தி (அ.சா7) தனது குறுக்கு விசாரணையில் 10 நபர்கள் ஒன்று சேர்ந்து கட்டை மற்றும் கற்களால் தாக்கும் போது அதிகப்படியான காயம் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், ஒரு நபர் வலி இருப்பதாக பாசாங்கு செய்ய இயலும் என சாட்சியம் அளித்துள்ளார்.

vii) மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்து 5 நிமிடங்கள் கழித்து தான் அ.சா.2 முதல் அ.சா.4 சாட்சிகள் சம்பவ இடம் வந்தார்கள் எனவும், தன்னிடம் கட்டப்படும் அ.சா.ஆ.1 ஆவணம் புகார் மனுவில் முதுகில் அடிபட்டதாகவோ, வலி உள்ளதாகவோ சொல்லவில்லை எனவும் சாட்சியம் அளித்துளளார். மேலும் தனது சாட்சியத்தில் அ.சா.1 சண்டையை முனியப்பன் மற்றும் வடிவேல் விலகிவிட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கில் வடிவேலை சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட முனியப்பன் தனது சாட்சியத்தில் அ.சா.1–னிற்கு காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்படி காயம் எதிரிகளால் ஏற்படுத்தப்பட்டது என சாட்சியம் அளிக்கப்படவில்லை.

viii) வழக்கு சாட்சிகள் அடிப்படையில் எதிரி மகேஸ்வரி மற்றும் அ.சா.1 இடையே நிலம் சம்பந்தமாக முன்விரோதம் உள்ளது தெரியவருகின்றது. அ.சா.1–


AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:11:45 +0530

னிற்கு தலையில் கிழிந்த காயம் உள்ளதாக மருத்துவர் சாட்சியத்தின் படி தெரியவரும் நிலையில், மேற்படி காயமானது எதிரிகளால் ஏற்படுத்தப்பட்டது என தனிநபர் சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை. இருதரப்பினரிடையே முன்விரோதம் உள்ளதாக தெரியவரும் நிலையில் எதிரி மகேஸ்வரி, அ.சா.1–ஐ கெட்டவார்த்தையால் திட்டி எதிரிகள் பகலவன், முனிராஜ், கோவிந்தராஜ் ஆகியோர்கள் அ.சா.1–ஐ தடுத்து நிறுத்தி பிடித்துக்கொள்ள எதிரி மகேஸ்வரி, அ.சா.1 னின் தலையில் கட்டையால் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் எனவும், கொலைமிரட்டல் விடுத்தார் எனவும், தனி நபர் சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கபட்ட அ.சா.2 முதல் அ.சா.4 சாட்சிகள் அ.சா.1 நிற்கு தலையில் காயம் ஏற்பட்டது என சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி காயத்தை எதிரி மகேஸ்வரி ஏற்படுத்தினார் என சாட்சியங்கள் அளிக்கப்படவில்லை. மேற்படி சாட்சிகள் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தெரிந்துகொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே வழக்கு சம்பவத்தை தனி நபர் சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

எனவே, **முடிவாக,** 1–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 294(b), 324, 506(2) –ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 2, 3எதிரிகள் மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 341, 506(2) –ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 4–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 341, 323, 506(2) –ன் கீழ் குற்றச்சாட்டுகளும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டார்கள் என்று தீர்மானித்து, 1 முதல் 4 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் 1 முதல் 4 எதிரிகளுக்காக எழுதி கொடுக்கப்பட்ட பிணையபத்திரங்கள் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து தாக்கல் இல்லை.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:11:56 +0530

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 –ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:12:02 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

பாலக்கோடு.

**அனுபந்தம்**

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 – திரு. கிருஷ்ணன்

அ.சா.2 – திரு.முனியப்பன்

அ.சா.3 – திருமதி.வாசுகி

அ.சா.4 – திரு.வஞ்சிகோவன்

அ.சா.5 – திரு.கோவிந்தராஜ்

அ.சா.6 – திரு.முருகேசன்

அ.சா.7 – திருமதி.சுகந்தி (மருத்துவர்)

அ.சா.8 – திரு.தணிகாசலம் (காவல் உதவி ஆய்வாளர்)

**2.அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அ.சா.ஆ – 1 புகார் மனு

அ.சா.ஆ – 2 பார்வை மகஜர்

அ.சா.ஆ – 3 OP ரசீது (கிருஷ்ணன்)

அ.சா.ஆ – 4 காயச்சான்று (கிருஷ்ணன்)

அ.சா.ஆ – 5 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ – 6 மாதிரி வரைபடம்

3. **அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்** – இல்லை

**4. எதிரிகள் தரப்பில் சாட்சிகள்**

எ.சா.1 – திருமதி. மகேஸ்வரி

எ.சா.2 – திருமதி.வளர்மதி

5. **எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்**

எ.சா.ஆ – 1 : 26.05.2020–ம் தேதி எ.சா.1 – கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை.

எ.சா.ஆ – 2 : எ.சா.1 –ன் மருத்து சிகிச்சையின் போது பெறப்பட்ட மருத்துவ டிஸ்ஜார்ஜ் சம்மரி.

எ.சா.ஆ – 3 : எ.சா.2 –ன் மருத்து சிகிச்சையின் போது பெறப்பட்ட மருத்துவ டிஸ்ஜார்ஜ் சம்மரி.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:12:12 +0530

**6. எதிரிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றுபொருட்கள் – இல்லை**

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.17 18:12:18 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

பாலக்கோடு.

<u>குறிப்பு–</u>

1. இத்தீர்ப்பின் நகல் அரசு தரப்பினருக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் சென்றுள்ளார்.
4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.